

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய் புதூர் முதல் கண்ணப்பாடி வரை செல்லும் வனசாலையை மேம்படுத்துவது தொடர்பாக கண்ணப்பாடி அடிவாரம் பகுதியில் நேரில் ஆய்வு மேற்கொண்டு, உரையாற்றினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங் ரவி, நெடுஞ்சாலைத்துறை சேலம் கோட்ட கண்காணிப்பு பொறியாளர் சசிகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### சேலம் மாவட்டம் – காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் – கணவாய்புதூர் வழியாக

# ஏற்காடு செல்லும் சாலையினை - 2 கட்டங்களாக விரிவுபடுத்திட நடவடிக்கை!

## அமைச்சர்கள் எ.வ. வேலு – இரா. இராஜேந்திரன் நேரில் ஆய்வு!

சேலம், அக். 12-

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் ஆகியோர் கணவாய் புதூர் முதல் கண்ணப்பாடி வரை செல்லும் வனசாலையை மேம்படுத்துவது தொடர்பாக நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் ஆகியோர் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய் புதூர் முதல் கண்ணப்பாடி வரை செல்லும் வனசாலையை மேம்படுத்துவது தொடர்பாக கண்ணப்பாடி அடிவாரம் பகுதியில் நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். தீவட்டிப்பட்டி தேசிய நெடுஞ்சாலை பிரிவில் இருந்து ஏற்காடு மலைப்பகுதிக்கு செல்லும் கண்ணப்பாடி முதல் நாகலூர் சாலையை மேம்பாடு செய்து மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக சேலம் நகருக்கு செல்ல ஏதுவாக இருக்கும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். அதன்படி காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய்புதூர் வழியாக கண்ணப்பாடி நாகலூர் வழியாக ஏற்காடு செல்லும் வன சாலையை மேம்படுத்துவது தொடர்பாக கண்ணப்பாடி அடிவாரம் பகுதியில் இன்று ஆய்வு செய்யப்பட்டது.

ஏற்காட்டிற்கு செல்ல ஏற்கனவே சேலம் வழியாகவும், அயோத்தியாப்பட்டணம் வழியாகவும் சாலைகள் உள்ளது. அதேபோல் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் பெங்களூரிலிருந்து வரும் பொதுமக்கள் இச்சாலை மூலம் எளிதாக சேலம் நகருக்கு வராமல் ஏற்காடு செல்ல முடியும். அதன்படி நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களின் மூலம் இச்சாலையினை அகலப்படுத்துவது குறித்து ஆய்வு செய்தபோது இச்சாலையானது ஊராட்சி ஒன்றிய சாலை, வனத்துறை சாலை, மாநில நெடுஞ்சாலை என 3 பிரிவுகளாக உள்ளது.

எனவே நெடுஞ்சாலைத் துறை மூலமாக இச்சாலையை அமைத்திட வனத்துறையிடம் அனுமதி பெற்று சாலை அமைக்க வேண்டும். அதேபோன்று ஊராட்சி ஒன்றிய சாலைகள் அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையின்படி சென்னை இயக்குநரகத்தில் அனுமதி ஆணையை பெற்று சாலை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறான சூழ்நிலையில் உடனே மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு செல்ல வேண்டுமெனில் இப்பணிகளை 2 கட்டங்களாக கொண்டு செய்து முடிக்கலாம்.

முதற்கட்டமாக கணவாய்புதூர் வழியாக ஒன்றியசாலை, அதனைத்தொடர்ந்து கணவாய்புதூர் வன சாலை அதன்மூலமாக 5.5 கி.மீ தூரம் வரை சாலை அமைத்தால் கண்ணப்பாடி வரை இச்சாலையை கொண்டு செல்ல முடியும். அதன்படி இரண்டாம் கட்டமாக கண்ணப்பாடியிலிருந்து நாகலூர் வழியாக ஏற்காடு செல்ல முடியும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

வனச்சாலைகள் மிக குறுகிய நிலையில் 3 மீட்டரும், ஊராட்சி ஒன்றிய சாலைகள் 3.50 மீட்டரும் உள்ளது. இதில் போக்குவரத்திற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஆதலால் இச்சாலைகளை அமைப்பது மட்டுமல்லாமல் 5.50 மீட்டர் சாலையாக விரிவுபடுத்த வேண்டும். அவ்வாறாக செய்தால் மட்டுமே பேருந்துகள், கனரக வாகனங்கள் செல்ல முடியும். எனவே கண்ணப்பாடி வரை சாலை அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட வன அலுவலர் ஆகியோர் கலந்து பேசி வனச்சட்டத்தின்படி சாலை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் பொதுமக்களின் இக்கோரிக்கை குறித்து கலந்து ஆலோசித்து 2 கட்டமாக இப்பணிகளை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங் ரவி, நெடுஞ்சாலைத்துறை சேலம் கோட்ட கண்காணிப்பு பொறியாளர் சசிகுமார், கோட்ட பொறியாளர்கள் திருமதி மங்கையர்க்கரசி, முத்துக்குமரன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் வடமுகம் வெள்ளோடு ஊராட்சி சார்பில் ”உங்களுடன் ஸ்டாலின் முகாமை அமைச்சர் சு.முத்துசாமி ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் வி.சி.சந்திரகுமார், எம்.எல்.ஏ. ப.செங்கோட்டையன், செல்வராஜ், வாசுகி ஜெகநாதன், பேபி முருகேசன், சசிகுமார், ராஜ்குமார் செங்கோட்டையன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை கும்பகோணம் பிரதான சாலை காவேரி நகரில் சாரங்கபாணி நினைவு பாலம் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.உடன் மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எஸ்.ராஜகுமார் எம்.எல்.ஏ., குத்தாலம் க.அன்பழகன், பி. எம்.ஸ்ரீதர்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்து மகேந்திரன். ஜி.என்.ரவி, மு.ஞானவேல், மகா.அலெக்சாண்டர், குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஏ.ஆர்.ராஜா, கு. வைத்தியநாதன், பஞ்சு குமார், ஞான இமையநாதன், மூவலூர். மூர்த்தி, ப முருகமணி, பி சிவதாஸ், நத்தம் ஏ.வின்சென்ட், எம. சம்சுதீன் உள்ளிட்டோர் உள்ளனர்.



கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், சிறுமுகையில் கைத்தறி துறை சார்பில் சிறிய அளிவிலான கைத்தறி பூங்காவை (MiniHandloom Park) கழக துணைப் பொதுச் செயலாளர், ஆ.ராசா எம்.பி., அமைச்சர் ராணிப்பேட்டை ஆர் காந்தி ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, டி.ஆர்.சண்முகசுந்தரம், பா.அருன்குமார், எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம் உள்பட துறைசார்ந்த அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கடமை தவறாத கொள்கைப் பேனா!

## (அக்டோபர் 10- முரசொலி செல்வம் நினைவு நாள்)



**வெ**ற்றியிலும் தோல்வியிலும் மனதை சமநிலையில் வைத்திருப்பது அத்தனை எளிதல்ல. ஆனால், அத்தகைய மனநிலையைப் பெற்றவர்களே எந்தத் தருணத்திலும் தன் வலிமையை இழக்காதவர்களாக இருப்பார்கள். 1962 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வினர் 50 பேர் வெற்றி பெற்று சட்டமன்றம் சென்ற நிலையில், கட்சியின் நிறுவனரான பேரறிஞர் அண்ணா அவருடைய காஞ்சிபுரம் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தார். அந்த நிலையில் அவருடைய மனநிலை எப்படி இருந்தது, அதை எப்படி சமநிலைக்கு கொண்டு வந்தார் என்பதை திராவிட நாடு இதழில் அவர் எழுதிய ‘அறுவடையும் அணிவகுப்பும்’ என்ற கடிதத்தில் காண முடியும்.

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டு, அந்தப் பழியைத் தூக்கி “தி.மு.க. மீது அபாண்டமாக போடப்பட்ட 1991 தேர்தல் களத்தில், வெற்றிக்கான வாய்ப்பே இல்லை என்ற நிலையிலும் கலைஞர் சோர்ந்துவிடவில்லை. ஊர் ஊராக பரப்புரைப் பயணம் மேற்கொண்டு, தி.மு.க. என்கிற வெளிப்படைத் தன்மை கொண்ட ஜனநாயக இயக்கம் தேர்தல் களத்தில்தான் அரசியல் எதிரிகளுடன் மோதுமே தவிர, ஒரு போதும் இப்படிப்பட்ட கொலை பாதக செயலில் ஈடுபடாது” என்பதை விளக்கினார்.

அண்ணாவும் கலைஞரும் அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, பத்திரிகையாளர்கள். மக்களின் மனநிலை, களநிலவரம், பலம்-பலவீனம் எல்லாவற்றையும் அறிந்துகொள்வதில் ஆர்வமாக இருப்பார்கள். வெற்றி-தோல்வியைக் கடந்த சமநிலை மனது அவர்களுக்கு உண்டு. அரசியல் இயக்கங்களைச் சார்ந்த பத்திரிகையாளர்களுக்கு இந்த மனநிலை மிகவும் முக்கியமானது.

அண்ணாவை அறிந்தவரும் கலைஞரால் வளர்க்கப்பட்டவருமான முரசொலி செல்வம் சாரிடம் மனதின் சமநிலையை நேரில் பார்த்திருக்கிறேன். 1991 ஜனவரியில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட இரவில், கலைஞரும் மாறனும் முரசொலி அலுவலகத்திற்கு வர இயலாத நிலையில், முரசொலி செல்வம்தான், ஆட்சிக்கலைப்பின் பின்னணியில் நடந்த அரசியல் சதிகளைத் தொகுத்து எழுதி, ‘ஜனநாயகப் படுகொலை’ என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்டார்.

**கோவி லெனின்**
கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்



அதே ஆண்டு மே மாதத்தில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட இரவில், முரசொலி அலுவலகம் சூறையாடப்பட்டு, தீவைத்து எரிக்கப்பட்ட நிலையிலும், மறுநாள் காலையில் முரசொலி இதழ் உடன்பிறப்புகளின் கைகளில் போய்ச் சேர்ந்தது. செல்வம் சார்தான் அத்தனை பணிகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து, வெற்றிகரமாக முடித்தார்.

1991 தேர்தலில் தி.மு.க. ஒரேயொரு எம்.எல்.ஏ.வைப் பெற்ற நிலையில், சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி இல்லாத நிலையில், அந்தப் பணியை செய்தது முரசொலிதான். அதற்காக முரசொலி செல்வம் மீது உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்து அவரை சட்டமன்றத்தில் கூண்டில் ஏற்றி விசாரித்தது ஜெயலலிதா அரசு. இந்திய ஜனநாயகத்தில் சட்டமன்றத்தில் விசாரணைக் கூண்டு கொண்டு வரப்பட்ட அவலம் அப்போதுதான் நிகழ்ந்தது. கூண்டிலேறிய செல்வம், ஒரு பத்திரிகையாளராக தன்னுடைய பணியை செய்ததை துணிவுடன் பதிவு செய்தார்.

அ.தி.மு.க.வினரும் பிற எதிர்க்கட்சிகளும் உருட்டுகின்ற சர்க்காரியா கமிஷன் என்பது என்ன, அதன் விசாரணை எப்படி நடைபெற்றது, அதில் எம்.ஜி.ஆர். அடித்த பல்டி எப்படிப்பட்டது, கமிஷன் விசரணையில் எங்குமே குறிப்பிடப்படாத ‘விஞ்ஞான ஊழல்‘ என்ற வார்த்தையை அரசியல் மனப்பிறழ்வாளர்கள் தொடர்ந்து பயன்படுத்தும் அயோக்கியத்தனம் அனைத்தையும் விளக்கி ஒரு புத்தகமாக எழுதியவர் முரசொலி செல்வம்.

அவருடைய எழுத்தில் உருவான மற்றொரு புத்தகமான, ‘முரசொலி-சில நினைவுகள்‘ அரை நூற்றாண்டுகால அரசியல் வரலாற்றையும் அதில் முரசொலி எதிர்கொண்ட சவால்களையும் விளக்கும் வரலாற்று ஆவணம்.

‘சிலந்தி’ என்ற பெயரில் முரசொலியில் வெளியான ஆணித்தரமான கட்டுரைகளை எழுதியவர் முரசொலி செல்வம்தான் என்பதை தி.மு.க நிர்வாகிகள் பலரே அவரது இறப்புக்குப் பிறகுதான் அறிந்து கொண்டனர்.

தன்னை முன்னிலைப்படுத்தி விளம்பரப்படுத்திக் கொள்வதில் முனைப்பு காட்டாமல், இயக்கத்தின் வலிமைக்குத் துணை நிற்பதே இயக்கப் பத்திரிகையாளரின் கடமை. அந்தக் கடமை தவறாத கொள்கை வீரர் முரசொலி செல்வம்.




திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் பொன்னுச்சாமி திருமண மண்டபத்தில் வெள்ளகோவில் நகராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் வெள்ளகோவில் நகர் மன்றத்தலைவர் கனியரசி முத்துக்குமார், நகராட்சி ஆணையாளர் மனோகரன், மண்டல இயக்குநர் (நகராட்சி நிர்வாகம்) ஓ.ராஜாராம், நகராட்சி பொறியாளர் குணசீலன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.